பழனிகோயில் குடமுழுக்கை தமிழில் நடத்தி -

# தமிழுக்குப் பெருமை சேர்த்தவர் நமது முதல்வர்!

## சட்டப் பேரவையில் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு பெருமிதம்!



சென்னை, பிப். 24 -

“பழனி கோயில் குடமுழுக்கை தமிழில் நடத்தி தமிழுக்குப் பெருமை சேர்த்தவர், நமது முதல்வர் அவர்கள்!” என்று, சட்டப் பேரவையில் விவாதத்தில் குறுக்கிட்டுப் பேசிய இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

சட்டப் பேரவையில் இதுகுறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**பி.தங்கமணி:** பழனி கோயிலுக்கு காலம் கால மாக விரதம் இருந்து காவடி எடுத்துக்கொண்டு, 100 கிலோ மீட்டர், 150 கிலோ மீட்டர் என்றளவில் நடந்து செல்கிறார்கள். இந்த அரசு வந்ததற்குப் பிறகு, அந்த மலையின் அடிவாரத்திலேயே மேள, தாளத்தை நிறுத்திவிடுகிறார்கள். மேலே சென்று மூன்று சுற்றுகள் சுற்றி கொடி மரத்திற்கு அருகே வந்து, சாமியை வரவழைத்த பின்னர்தான் அந்தக் காவடிகளை இறக்கி வைப்பார்கள். அதுபோன்று காலம் காலமாக இருக்கின்ற சூழ்நிலையை, அந்த உணர்வுகளை, உணர்வுகளை மதித்து அவர்களுக்கு மீண்டும் அந்த வாத்திய இசைக் கருவிகள், மேள, தாளங்களை மேலே அனுப்புவதற்கு இந்த அரசு முன்வர வேண்டும்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** சற்றேறக்குறைய 15 ஆண்டுகளில் கணக்கிட்டுப் பார்க்கும்போது, பழனி திருக்கோயிலுக்கு தைப்பூச நாளில் மூன்று மடங்கிற்கும் அதிகமான பக்தர்கள் தரிசனத்திற்கு வருகின்ற சூழ்நிலை இருக்கிறது.

மேள, தாளங்கள் குறிப்பிட்ட அளவிற்கு மேலே செல்ல அனுமதிக்கப்படுகிறது. ஒவ்வொரு குழுவினரும் 50, 60 இசைக் கருவிகளுடன் மேலே செல்கின்ற போது பக்தர்களுக்கு நெருக்கடி ஏற்படுகின்ற காரணத்தினால், அதனைக் குறைக்கின்ற நோக்கத்தோடும், பக்தர்கள் விரைவாக சுவாமி தரிசனம் செய்கின்ற ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்பதற்காகவும், மலையின் அடிவாரம் வரையில் அதிக இசைக் கருவிகளோடு, வாத்தியங்களோடு வரும் பக்தர்கள் - குறிப்பிட்ட அளவிற்கு, இசைக் கருவி வாத்தியங்களோடு அனுமதிக்கப்பட்டு, சுவாமி தரிசனம் புகழோடு, சிறப்போடு நடத்தப்படுகிறது.

பழனி திருக்கோயிலைப் பொறுத்தளவில், ஒரு நீண்ட, நெடிய வரலாற்றில், முதலமைச்சர் அவர்கள் பழனி கோயிலுக்கான குடமுழுக்கை தமிழிலே நடத்தி, இந்தத் தமிழகத்திற்கும், தமிழுக்கும் பெருமை சேர்த்தவர்.

வருகின்ற காலங்களில் இன்னும் அதிகமான, கூடுதலான இசைக் கருவி வாத்தியங்களோடு பக்தர்களை அனுமதிப்பதற்குண்டான முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொள்ளும்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

---

கன்னிகை ஜி.ஸ்டாலின் - க.தனசேகரன், பிரபாகர்ராஜா பங்கேற்பு!

# கலைஞர் நகர் தெற்கு - வடக்கு பகுதி பாக தலைவர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர்கள் கே.கண்ணன் - மு.ராசா அறிவிப்பு!

சென்னை, பிப். 24-

கலைஞர் நகர் தெற்கு - வடக்கு பகுதி கழக பாக தலைவர்கள் கூட்டம் நடைபெறுகிறது.

இது குறித்து பகுதிச் செயலாளர்கள் கே.கண்ணன், மு.ராசா, விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழகத்தலைவர், தமிழ்நாடு முதல்வர் அவர்களின் ஆணைப்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்ரமணியன் அறிவுறுத்தல்படி, விருகம்பாக்கம் தொகுதி, கலைஞர்நகர் தெற்கு - வடக்கு பகுதி பாக தலைவர்கள் கூட்டம், நாளை 25.02.2024 ஞாயிறு காலை 9 மணியளவில், 80 அடி ரோட்டில் உள்ள கோல்டன் பாரடைஸ் திருமண மண்டபத்தில் பகுதி செயலாளர்கள் கே.கண்ணன், மு.ராசா தலைமையில், விருகம்பாக்கம் தொகுதி எம்.எல்.ஏ. ஏ.எம்.பி.பிரபாகர் ராஜா, கணக்கு நிலைக்குழு தலைவர் க.தனசேகரன், தொகுதி பொறுப்பாளர் கன்னிகை ஜி.ஸ்டாலின் முன்னிலையில் நடைபெற உள்ளது. பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், வரவேற்க, பொதுக்குழு உறுப்பினர்கள் உ.துரைராஜ், பி.எஸ்.முருகேசன், எஸ்.டி.தங்கராஜ், மாவட்ட துணை செயலாளர் வாசுகிபாண்டியன் பங்கேற்க உள்ள இக்கூட்டத்தில் தெற்கு-வடக்கு பகுதிக்குட்பட்ட பாக தலைவர்கள் அனைவரும் கண்டிப்பாக கலந்து கொள்ளுமாறு கேட்டு கொள்கிறோம்.

இவ்வாறு பகுதி செயலாளர்கள் கே. கண்ணன் - மு.ராசா தெரிவித்துள்ளனர்.



திருவொற்றியூர் கழக மூத்த முன்னோடி பெ. சித்தானந்தம் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாள் 22.2.2024 அன்று காலை அனுசரிக்கப்பட்டது. இதில் மாவட்ட பிரதிநிதி பி.எஸ்.சைலஸ், பரமானந்தம், மனோகரன், கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை மாவட்ட அமைப்பாளர் கு.தமிழ் மணி, இலக்கிய அணி மாவட்ட தலைவர் த.மகிழன், முன்னாள் பகுதி பிரதிநிதி இரா.கணேசன், பகுத்தறிவாளர் கழக திருவொற்றியூர் ஒருங்கிணைப்பாளர் பா.சரவண குமார், வாழப்பாடி செந்தில், ஏ.பி.நாகராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டு அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினர்.

---

கூ.பீ.ஜெயின் எம்.சி. தலைமை! தயாநிதிமாறன் எம்.பி - அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ. முன்னிலை!

# வில்லிவாக்கம் மேற்கில் 171 தொழுநோயாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

## அரசு கொறடா கோவி.செழியன் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்குகின்றனர்!

சென்னை, பிப். 24

சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு “அன்னை தெரசா மனம் கொண்டவர் அனைவரும் வாழும் குணம் கொண்டவர் “ எனும் தலைப்பில் சூரிய சுடர் 17 வில்லி வாக்கம் பலராமபுரம் பகுதியில் வாழும் 171 தொழுநோயாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா 26.2.2024 திங்கட்கிழமை, காலை 10 மணியளவில் நடைபெறுகிறது.

வில்லிவாக்கம் மேற்கு பகுதிச் செயலாளர், 8 வது மண்டலக் குழுத் தலைவர் கூ.பீ.ஜெயின் தலைமை தாங்குகிறார்.

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மத்தியசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றி அழகன் ஆகியோர் முன்னிலையில் தமிழ்நாடு அரசு தலைமை கொறடா கோவி.செழியன் 171 தொழுநோயாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்.

இவ்விழாவில் கிழக்கு பகுதி செயலாளர் வே.வாசு, சாவித்திரி ஸ்ரீ வீரராகவன், டி.வி.செம்மொழி எம்.சி, சுதா தீனதயாளன் எம்.சி, வானவில் விஜய், லதா வாசு எம்.சி, ஆர்.வரதன், ஜி.ஜெ. பிரபு, எம்.சுரேஷ், ஜெ. எஸ்.பிரபு, வி.து.ராமமூர்த்தி, பா.இளையா, மு. கலைச்செல்வி, ஐ.சி.எப். சுரேஷ்பாபு, சிட்கோ சேகர், க.சுகுமாரன், மா. அகிலன், பா.ஜானி, சொ. முருகேசன், ப.லோகுபாபு, ஜெ.தங்கராஜ், ஆர்.கோபாலகிருஷ்ணன், மா.கபிலன் கோ.மணிவேந்தன், பா.தே. தீனதயாளன், கே.எஸ்.பாபு, க.மணிமாறன், எஸ்.கே.பி. தீபக்குமார், ம.சுந்தர் எபி, ஆ.சக்திவேல், சிட்கோ. பி.சுரேஷ்பாபு, பூ.சத்தியேந்திரன் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு தலைவரும், தலைமை செயற்குழு உறுப்பினருமான ப.ரங்கநாதன், வில்லிவாக்கம் தொகுதி தேர்தல் பார்வையாளர் வே.கௌதமன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் கே.எஸ். ரவிச்சந்திரன், பி.கே. மூர்த்தி, கே.சந்துரு, சங்கரி நாராயணன், எஸ்.மணி மூடி, கே.எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமார், என்.வி. எம்.ஷேக்அப்துல்லா, வே. உமாகாந்த், சி.மகேஷ் குமார், பரிதி இளம்சுருதி, வழக்கறிஞர் இந்திரஜித், கோ.ஏகப்பன், தேவஜவஹர், ஜி.மகாதேவன், புனிதவதி எத்திராசன், இசட். ஆசாத், சொ.வேலு, சரிதாமகேஷ்குமார், பா.ஸ்ரீராமுலு, டாக்டர்.ஜி.சாந்தகுமாரி, ஐ.சி.எப்.வா.முரளிதரன், எ.நாகராசன், டி.எஸ்.பி. ராஜாகோபால், எம்.டி.ஆர். நாகராஜ், செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, வி. சுதாகர், எஸ்.முரளி, எஸ். இராஜசேகர், எஸ்.பன்னீர் செல்வம், கோ.மணி, பி. ஜெ.துளசிங்கம், லயன் பி. உதயசங்கர், ரமேஷ் (எ) நீலகண்டன், எம்.இப்ராஹிம் கனி, அ.நிர்மலாதேவி, டாக்டர். ஏ.பி.பூர்ணிமா, இரா. கலைச்செல்வி, டி.லோகேஷ், ஜெ.பாலமுருகன் பா.ஜெகதீஷ், க. வினோத், எஸ்.தனசேகர், டி.சங்கர்நானா, நா.துலுக்காணம், எல்.பி.எப்.மோகன், துரைகண்ணன், ஜி.தாமோதரன், ராஜேஸ்வரிஸ்ரீதர், ஜி.வி.நாகவள்ளி, எம். பெரோஸ்கான், பி.விஜயகுமார், எம்.விநாயகம், எஸ். சித்திக், ம.அசோக்குமார், க.பா.பிரதீப்குமார், கு. கிருஷ்ணமுர்த்தி, எல்.சம்பத்குமார், கா.ராஜ்முகமது, து.ஆயிரம், புரசை டி.சம்பத், டி.தாமோதரன், டபல்யு.அமுல், நா.அறிவுடைநம்பி, எ.வேதா, விக்னேஷ் சீனிவாசன், ச.மனோகரன், கே.பாஸ்கர், சி.தேவராஜ், காஞ்சி செ.துரை, வி.சபாபதி, வ.ரமேஷ்பாபு, மு.பரமானந்தன், டி.ஸ்டாலின், ந.குமார், எ.சத்தியநாராயணன், கி.ஜெய்சங்கர், ப.செந்தில்குமார், எஸ். துரைபாபு, கே.ராஜா, வி. ஆர்.ஜெயக்குமார், எஸ். எஸ்.மணிகண்டன் சிட்கோ எஸ்.அன்வர்தீன், ப.மலர்கொடி, சாந்திபில்லி, தே.ச. சுந்தர், ஜி.கே.வெங்கட், வழக்கறிஞர். பி.கோபிலதா, வழக்கறிஞர் ஜெ.சரவணன், வழக்கறிஞர் மா.முரளி வினோத், வழக்கறிஞர் என். விஜயகுமார், ஓசோன் மனோகரன், பொறியாளர் எம்.எஸ்.ரமேஷ், டாக்டர் எம்.ஜி.திவ்யானந்தன், வழக்கறிஞர் சாந்தனு, ஸ்டண்டு வி.புஷ்பராஜ், ஜிம்.முரளி (எ) சையத், டி.பாஸ்கரன், ச.காளிதாசன், சிட்கோ த.விஜயகுமார், கே.தங்கவேல்ராஜன், டி.சையத்தியமத்துல்லா, ஆ.சுரேஷ் குமார், வழக்கறிஞர் கே.சுப்பிரமணி, வழக்கறிஞர் எம். குணசேகரன், எஸ்.பி. ஜெகா, பி.ஜெயந்தி, உ.பிரசன்னவேலன், வழக்கறிஞர் பா.சுந்தர், கே.ஜி.அய்யாதுரை, எம்.முத்து, ஆர்.ராஜசேகர், என்.மோகன்குமார், வி.ராஜமாணிக்கம், சா. அருண்குமார், சண்முகசுந்தரம், ராபர்ட் ராஜன், எம். விஜயகுமார், க.பிரகதீஷ்வர், அனுசுயா பாண்டுரங்கன் மு.கிருஷ்ணவேணி வெ.ராஜேஷ், எஸ்.வெற்றிவேல் சண்.இரவி, ம.ஜெகதீஸ்வரன், டி.ஜானகிராமன், பிரேமாதயாளன், ஆர்.இருதயமேரி, வழக்கறிஞர் ஜி. அய்யனார், ஆர்.மோகன்ராஜ், டி.எச்.செல்வராஜ், ந. வேணு, பி.வேணுகோபால், எ.மணிமாறந, ஆர்.நித்யானந்தி, அ.குபேரன், மு.சரவணன், ஆ.புஷ்பராஜ், ரா. கணேஷ்குமார், பி.சுப்பிரமணி, ரா.தட்சிணாமுர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், பாக முகவர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சிக்கு 94 (அ) வட்டச் செயலாளர் ஆர். தீனதயாளன் நன்றி கூறுகிறார்.

---





# இயற்கை எய்தினார்

முத்தூர் பேங்கர் சாமியப்ப கவுண்டர் மகனும்
முத்தூர் பங்களா தோட்டம்
**மு.பெ.கிருஷ்ணகுமார்,**
தி.மு.கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்,
மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர்
**மு.பெ.சாமிநாதன்**
ஆகியோரின் தந்தையுமான

## திரு. சா.பெருமாள்சாமி கவுண்டர்
அவர்கள்

23-02-2024 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில்
இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மகன் – மருமகள்
மு.பெ.கிருஷ்ணகுமார்
கி.உமா

பேத்தி :
ஆர்த்தி - ஆதவன்

மகள் – மருமகன்
தனலட்சுமி - தமிழ்செல்வன்

பேரன் :
மகேஷ்குமார்-வினு கீர்த்தனா

கொள்ளுப் பேத்தி : ஆரியா

மகன் – மருமகள்
மு.பெ.சாமிநாதன்
சா.உமாதேவி

பேரன் : சா.ஆதவன் - ஸ்ரீ நேத்ரா

கொள்ளுப் பேரன் – கொள்ளுப் பேத்தி
சமரன் சாமிநாதன்
சனா ஆதவன்

பேத்தி : சிவசம்யுக்தா- ராகுல்ப்ரித்வி

கொள்ளுப் பேத்தி :
ராதே ராகுல்

திருப்பூர் சம்பந்தி
சாந்தி ஜெயபிரகாஷ்

கோவை சம்பந்தி
மாராத்தாள்
ஜெயகுமார் பழனிச்சாமி
காந்திமதி - நேகா